இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 04-10-2025

# ஆர்.எஸ்.எஸ். மிரட்டலில் பிரதமர்!

இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஏற்காத - இந்திய தேசியக் கொடியை ஏற்காத - ஜனநாயகம் என்ற சொல்லை ஏற்காத - அரசமைப்புச் சட்ட விழுமியங்களை ஏற்காத – மூன்று முறை இந்திய நாட்டில் தடை செய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி இருக்கிறார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

ஆர்.எஸ்.எஸ்., எனப்படும் ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கம், 1925ஆம் ஆண்டு மஹாராஷ்டிராவின் நாக்பூரில் தொடங்கப்பட்டது. இந்த இயக்கத்தின் நூற்றாண்டு விழா, டெல்லியில் நடைபெற்றது. இந்த விழாவில் பங்கேற்ற பிரதமர் மோடி, சிறப்பு நாணயம் மற்றும் அஞ்சல் தலையை வெளியிட்டார். ரூ.100 மதிப்பு கொண்ட நாணயத்தின் ஒரு பக்கத்தில் தேசியச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில், சிம்ம வாகனத்தில் வரத முத்திரையுடன் பாரத மாதா இருக்கும் படமும், அதனை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வணங்குவது போன்ற உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்த நாணயத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு விழா என்ற வாசகம் ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருக்கிறது. ‘அனைத்தும் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நாட்டிற்கே அனைத்தும் சொந்தம். என்னுடைய எதுவும் இல்லை’ எனப் பொருள்படும் வாசகமும் பொறிக்கப்பட்டு உள்ளது.

சிறப்பு நாணயத்துடன் வெளியிடப்பட்ட அஞ்சல் தலையில் ‘1963ஆம் ஆண்டு குடியரசு தின விழாவின் போது நடந்த அணிவகுப்பில், ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் பங்கேற்ற புகைப்படம்’ இடம்பெற்றுள்ளது.

**அது என்ன 1963 படம்? இந்தியா குடியரசு ஆன 1950 ஆம் ஆண்டு அவர்கள் அமைப்பு தேசியக் கொடியை வணங்கும் படத்தை வெளியிட்டிருக்க வேண்டியதுதானே? உண்மையான தேச பக்த அமைப்பாக இருக்குமானால் 1925 ஆம் ஆண்டு தேசத்துக்காகப் போராடிய புகைப்படத்தை வெளியிட்டு இருக்கலாமே? இந்தியா விடுதலை அடைந்த 1947 ஆகஸ்ட் 15 அன்று தேசியக் கொடியை வணங்கி இருந்தால் அதனை வெளியிட்டு இருக்கலாமே? ‘நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்’ என்பதைப் போல வரலாற்றை 1963 ஆம் ஆண்டில் இருந்து எதற்காகத் தொடங்குகிறீர்கள்?**

ஏனென்றால் இந்திய விடுதலைப் போராட்டத்தை ஏற்காத அமைப்பு அது. விடுதலைக்குப் போராடாத அமைப்பு அது. ‘பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பது மட்டுமே தேசப்பற்று ஆகாது’ என்றும், ‘தேசியவாதம் ஆகாது’ என்றும் சொன்னவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் கோல்வார்க்கர். ஒத்துழையாமை இயக்கத்தையும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தையும் “சட்டத்தை மதிக்க வேண்டியது இல்லை என்ற நினைப்பை உருவாக்கிய இயக்கம்” என்று சொன்னவரும் அவர்தான்.

‘இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிய மேதாவிகளுக்கு மனுஸ்மிருதி தெரியவில்லை’ என்று எழுதியவர் கோல்வார்க்கர். “மனு தர்ம சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியலமைப்புச் சட்டம் வகுக்கப்பட வேண்டும்” என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் ஒருவரான சுதர்சன் சொன்னார். இந்தியாவின் அரசியல் நிர்ணய சபையானது மூவர்ணக்கொடியை இந்தியாவின் தேசியக் கொடியாக அறிவித்த போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அதனை ஏற்கவில்லை.

- இந்துக்களும் இசுலாமியர்களும் இணைந்து பிரிட்டிஷாருக்கு எதிராகப் போராடுவதை – இது போன்ற கூட்டு தேசிய நடவடிக்கைகளை எதிர்த்தவர்கள் இவர்கள். ‘வேர் வரை செல்லும் வேறுபாடுகள் கொண்ட இனங்களும் கலாச்சாரங்களும் ஒன்றுபட்ட முழுமையாக ஒன்றிணைக்கப்படுவது முற்றிலும் இயலாத ஒன்று என்பதை ஜெர்மனி நமக்குக் காட்டியுள்ளது” என்று கோல்வார்க்கர் சொன்னது இதனைத்தான்.
- ஜனநாயகம் என்பதையே மேலை நாட்டுக் கருத்தாக்கம் என்று நினைக்கக் கூடியவர்கள் இவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்களது சிந்தனையில் உருவாக்கப்படும் சட்டங்கள் ஆகியவற்றுக்கு மரியாதை தராமல் ‘ஏகசாலக் அனுவர்த்தித்வா’ என்று சொல்லப்படும் ஒற்றைத் தலைவரின் அதிகாரத்துக்கு கேள்விக்கு இடமின்றி அடிபணியும் கொள்கையை அரசியல் – ஆட்சியல் கோட்பாடாக மாற்றுவதுதான் இவர்களது நடைமுறையாகும்.

சாதிப் பாகுபாட்டை முழுக்க முழுக்க நியாயப்படுத்தும் அமைப்பு இது. சாதிப் பிரிவு என்பதையே ‘வர்ண வியாவஸ்தா’ என்று சொல்லிக் கொள்வார்கள். சாதி அமைப்பு முறைதான் இந்தியாவைக் காப்பாற்றுவது என்ற கொள்கை கொண்டவர்கள் இவர்கள். ‘சாதி அமைப்பு முறையானது சமூகத்தில் ஒற்றுமையைக் காப்பதற்கே உதவி செய்திருக்கிறது’ என்று சொன்னவர் கோல்வார்க்கர்.

இன்றைக்கு இருக்கும் மாநிலங்கள் என்ற அமைப்பையே ஏற்காதவர்கள் இவர்கள். சமஸ்கிருதத்தை ஆட்சி மொழியாக ஆக்க நினைப்பவர்கள். சமஸ்கிருதம் ஆட்சிமொழி ஆகும் வரை இந்தியை ஆட்சி மொழி ஆக்க நினைப்பவர்கள் இவர்கள். இந்த அமைப்பின் நூற்றாண்டு விழாவை, இந்தியப் பிரதமர் கொண்டாடுவது இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கே எதிரானது ஆகும்.

**“நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாதியின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரே அஞ்சல் தலையும் நினைவு நாணயமும் வெளியிடும் அவல நிலையில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும்!” என்று மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**“ஆர்.எஸ்.எஸ். இயக்க நினைவு நாணயத்தை வெளியிட்டது அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிப்பதாகும்”** என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மோடியின் இந்த ஆக்டிங்க்கு பின்னணி என்ன?

**ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பிரதமர் மோடியை மிரட்டி வருகிறது என்றே டெல்லி தகவல்கள் சொல்கின்றன. மோடி நினைக்கும் ஆளை பா.ஜ.க. தலைவராக நியமிக்க முடியவில்லை. ஆர்.எஸ்.எஸ். அமைப்பு சொல்லும் நபரை, மோடி நியமிக்க மறுக்கிறார். இந்த நிலையில் இரண்டு துணை பிரதமர்களை நியமிக்கச் சொல்லி ஆர்.எஸ்.எஸ். அமைப்பு கட்டாயப்படுத்தி வருவதாகவும் சொல்லப்படுகிறது. பா.ஜ.க. எம்.பி.க்களே மூன்றாகப் பிரிந்து கிடக்கிறார்கள் என்கிறார்கள். ‘75 வயதானவர் மோடி அவர் பதவி விலக வேண்டும்’ என்றும் சிலர் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். இத்தகைய அரசியல் நெருக்கடிகளில் இருந்து தப்பவே நாணயம் வெளியிட்டார், அஞ்சல் தலை வெளியிட்டார்.**

**தனக்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை சமாளிக்க அரசமைப்புச் சட்டத்தை கேலிக்கூத்து ஆக்கக் கூடாது.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 2.10.2025 அன்று முகாம் அலுவலகத்தில், காணொலிக் காட்சி வாயிலாக நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், கடலூர், திருச்சி, அரியலூர் ஆகிய டெல்டா மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நெல் கொள்முதல், சேமிப்பு, இருப்பு, நகர்வு மற்றும் அரவை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, முனைவர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டெல்டா மாவட்டங்களில்

# விவசாயிகள் நலன் காத்திட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக். 4 –

டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளின் நலன் காத்திட நெல் கொள்முதல், சேமிப்பு மற்றும் உரங்கள் இருப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (2.10.2025) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் ஆகிய டெல்டா மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நெல் கொள்முதல், சேமிப்பு, இருப்பு, நகர்வு, அரவை மற்றும் உரங்கள் இருப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆண்டு மேட்டூர் அணை உரிய காலத்தில் திறந்த காரணத்தினாலும், கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதாலும், பருவ மழையினால் விவசாயிகளுக்கு தண்ணீர் குறிப் பிட்ட காலத்திற்குள் கிடைக்கப் பெற்றதாலும், இடுபொருள் மானியம், விவசாயக் கடன்கள் ஆகியவற்றினால் கடந்த ஆண்டைவிட அதிக அளவில் விளைச்சலும், மகசூலும் விவசாய பெருங்குடிமக்களுக்கு டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் கிடைத்துள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மழைக்காலங்களில் விவசாயிகள் பாடுபட்டு உற்பத்தி செய்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட கூடாது என்ற நோக்குடன் அதிக அளவில் நெல் சேமிப்புக் கிடங்குகளை கட்டிவருகிறது.

அந்தவகையில், இதுவரை நெல் மணிகளைப் பாதுகாத்திட 4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய நவீன நெல்சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 2024–25 நெல் கொள்முதல் பருவத்தில் முன் எப்போதும் இல்லாத அளவு சாதனையாக 47.99 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2024–2025 கொள்முதல் பருவத்தில் செப்டம்பர் மாதத்தில் நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர் மற்றும் கடலூர் ஆகிய ஐந்து டெல்டா மாவட்டங்களில் 1.27 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்த மாவட்டங்களில் மட்டும் 3.20 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த ஆண்டு உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ள காரணத்தினால் விவசாயிகளிடமிருந்து எவ்வித தாமதமுமின்றி நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டும் அதேசமயம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் விரைவாகவும், பாதுகாப்பாகவும் சேமிப்புக் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன் இக்கூட்டம் நடத்தப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆலோசனைக் கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசுச் செயலாளர்கள் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை, இருப்பு, சேமிப்பு, நகர்வு, கிடங்கு வசதி மற்றும் உரங்கள் இருப்பு ஆகியவை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டறிந்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வரும் கொள்முதல் பணிகள், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு ஏற்பாடுகள், பாதுகாப்பு வசதிகள் ஆகியவை குறித்து எடுத்துரைத்தனர்.

கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை சேமிக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகள் மட்டுமின்றி, வேளாண் துறையின் கீழ் வரும், வேளாண் விற்பனைத் துறை சேமிப்புக் கிடங்குகளையும், வேளாண் உற்பத்தித் துறையில் உள்ள ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கிடங்கு வசதியினையும், வேறு பல துறைகளின் கிடங்குகளையும் தேவைப்படும் இடங்களில் பயன்படுத்திக்கொள்ளவும், கொள்முதல் செய்யப்படும் நெல் உடனடியாக அரவை ஆலைகள் மற்றும் சேமிப்புக் கிடங்குகளுக்கு கொண்டு செல்லும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதுமட்டுமின்றி, டெல்டா மாவட்டங்களுக்கு சிறப்பு கண்காணிப்பு அலுவலர்களை நியமித்திடவும், வேறு மாவட்டங்களிலிருந்து கூடுதல் அலுவலர்களை அனுப்பி பணிகளை மேற்பார்வையிடவும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். நெல் கொள்முதல் நிலையங்களில் 2025 – 26 ஆம் ஆண்டில் மிக அதிகமாக நெல் கொள்முதல் எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து இடங்களிலும் போதுமான எண்ணிக்கையில் பணியாளர்கள் இருப்பதையும், விவசாயிகளுக்கு எவ்விதச் சிரமமும் இன்றி கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், டெல்டா மாவட்டங்களின் நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கிடங்குகளிலிருந்து கூடுதல் இரயில்வே வேகன்கள் மூலம் பிற மாவட்டங்களுக்கு விரைந்து நெல் மூட்டைகளை அனுப்பிடவும் அறிவுறுத்தினார்.

மழைக்காலங்களில் கூடுதல் கவனத்துடன் நெல் கொள்முதலைச் சிறப்பாகச் செய்திடவும், உரத் தேவையை நிறைவு செய்திடவும், நெல் சேமிப்பு மற்றும் நகர்வைத் துரிதப்படுத்தவும், டெல்டா மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிருவாக இயக்குநர் அ. ஜான் லூயிஸ், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் முனைவர். ஜெ.விஜயராணி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ப.ஆகாஷ், (நாகப்பட்டினம்), வ. மோகனச்சந்திரன், (திருவாரூர்), ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், (மயிலாடுதுறை), திருமதி பா. பிரியங்கா பங்கஜம், (தஞ்சாவூர்), சிபி ஆதித்யா செந்தில்குமார், (கடலூர்), வே.சரவணன், (திருச்சிராப்பள்ளி), பொ.இரத்தினசாமி, (அரியலூர்) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர்

# மல்லிகார்ஜூன கார்கே நலம் பெற வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!



சென்னை, அக். 4 –

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே அவர்கள் மீண்டும் நலம் பெற்று தனது பணிகளை தொடர வாழ்த்து தெரிவித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே அவர்கள் விரைவில் முழுமையாக குணமடைய எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**‘பேஸ்மேக்கர்’ பொருத்தப்பட்டுள்ள அவர் நலம்பெற்று, மீண்டும் தமது வழக்கமான பணிகளைத் தொடங்க இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்டம்,மாவட்ட விளையாட்டு அரங்கில் 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு பதக்கம், நினைவு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்